RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 268 | செப்டம்பர்.29 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







## ஐ.நா.வில் ஷெபாஸ் ஷெரீப்புக்கு பதிலடி தந்த இந்திய தூதர் பீட்டல் யார் இவர்?

புதுடெல்லி, செப்.29-

நியூயார்க்கில் ஐ.நா. பொதுச் சபை கூட்டம் நடைபெற்றது. இதில் பல் வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர். பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பேசும்போது, "ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின் போது, பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இந்தியாவின் 7 போர் விமானங்களை நாங்கள் சுட்டு வீழ்த்தினோம்" என்று கூறினார்.




இந்நிலையில், ஐ.நா. சபையில் இந்தியா சார்பில் நேற்று உரையாற்றும் சுற்று வந்தது. அப்போது ஐ.நா.வின் நிரந்தர பிரதிநிதியான முதன்மை செயலர் பீட்டல் கெலாட், ஷெபாஸ் ஷெரீப்புக்கு சரியான பதிலடி கொடுத்தார். சபையில் பீட்டல் பேசியதாவது: தீவிரவாத அமைப்புகளை பாதுகாக்கும் கேடயம் போல் இருக்கும் பாகிஸ்தான், தோல்வியை கூட வெற்றியாக சித்தரிக்க முயற்சிக்கிறது. ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின் போது, பாகிஸ்தானின் விமான தளங்கள் சேதப்படுத்தப்பட்டன. விமான தளத்தின் முக்கிய கட்டிடங்கள் நொறுங்கி எரிந்தன. அப்போது போரை நிறுத்த இந்தியாவிடம் பாகிஸ்தான் கெஞ்சியது. விமான படை ஓடு பாதை சேதம் அடைந்ததும், கட்டிடங்கள் தீயில் எரிந்ததும் வெற்றி என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கருதினால், அவர் சந்தோஷப்படுவதை வரவேற்கிறோம். இவ்வாறு பீட்டல் கெலாட் பேசினார்.


யார் இவர்? பீட்டல் கெலாட் அரசியல் அறிவியலில் முதுநிலை பட்டம் பெற்றவர். அத்துடன் மொழிபெயர்ப்பில் பட்டம் பெற்றவர். சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பயின்றவர். இவர் கடந்த 2023ம் ஆண்டு ஐ.நா.வின் இந்திய முதன்மை செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர் கடந்த 2024ம் ஆண்டு ஐ.நா. ஆலோசகராக பொறுப்பு வகித்தார்.

## எண்ணும் எழுத்தும் பயிற்சி அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்க அறிவுறுத்தல்

சென்னை, செப்.29-

1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பாக அக்.7ம் தேதி முதல் நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் ஆசிரியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை: தமிழகத்தில் கடந்த 2022-23ம் கல்வியாண்டு முதல் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் அரசாணையின்படி 2025 முதல் 2027ம் ஆண்டு வரை தொடர்ந்து நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. இந்நிலையில் நடப்புக்கல்வி யாண்டில் (2025-26) 1முதல் 4ம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எண்ணும் எழுத்தும் பாடப்பொருள் சார்ந்து 2ம் பருவத்துக்கான ஒன்றிய அளவிலான பயிற்சியினை அக்.7ம் தேதி முதல் அக்.10ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிக்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஏற்றவாறு குழுக்களாகப் பிரிந்து கருத்தாளர்கள், குழுக்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு பயிற்சி நாள்களை முடிவு செய்து, மேற்குறிப்பிட்ட தேதிக்குள் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி நடைபெறும் நாளில் தொடக்க வகுப்புகளில் கல்வி சார்ந்த பணிகள் பாதிக்கப்படக் கூடாது. பயிற்சி நடைபெறும் நாளில் ஆசிரியர் இல்லாத நிலையில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் மாற்றுப் பணியில் ஆசிரியரை நியமனம் செய்ய வேண்டும். ஒன்றிய அளவிலான இந்த பயிற்சியில் 1 முதல் 5ம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அவர்களை பணிவிடுப்பு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருப்பதி பிரம்மோற்சவம் 4ம் நாள் விழா: கற்பகவிருட்ச வாகனத்தில் மலையப்பர் பவனி

திருமலை, செப்.29-

திருப்பதி பிரம்மோற்சவத்தின் 4ம் நாளான நேற்று காலை மலையப்பர் கற்பகவிருட்ச வாகனத்திலும் இரவு சர்வபூபால வாகனத்திலும் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

உலக பிரசித்தி பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவம் கடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக ஆந்திர அரசு சார்பில் சுவாமிக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு பட்டு வஸ்திரத்தை காணிக்கையாக வழங்கினார். இதையடுத்து தங்க கொடிமரத்தில் கருடன் சின்னம் பொறித்த கொடி ஏற்றப்பட்டது.

அன்று இரவு பெரிய சேஷ வாகனத்தில் தேவி, பூதேவி சமேதராக மலையப்பர் 4 மாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். வெகு விமரிசையாக தொடங்கிய பிரம்மோற்சவத்தில் தினமும் காலை, இரவு என இரு வேளைகளிலும் உற்சவரான மலையப்பர் மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமியை தரிசித்து வருகின்றனர்.

இந்நிலையில், பிரம்மோற்சவத்தின் 4ம் நாளான நேற்று காலை, திருமலையில் உள்ள வாகன மண்டபத்தில் இருந்து ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக மலையப்பர் கற்பகவிருட்ச வாகனத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ராஜமன்னார் அலங்காரத்தில் இருந்த மலையப்பரை பெருந்திரளான பக்தர்கள் தரிசித்தனர்.

4 மாட வீதிகளில் நடைபெற்ற இந்த வாகன சேவையில், காளை, குதிரை, யானை ஆகிய பரிவட்டங்களும், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த நடனக் கலைஞர்களும் பங்கேற்றனர். வாகனங்ளிலேயே அதிக பாரம் கொண்ட சர்வ பூபால வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக உற்சவர் மலையப்பர் நேற்றிரவு எழுந்தருளினார். குளிரையும் பொருட்படுத்தாமல் திரளான பக்தர்கள் சுவாமியை வழிபட்டனர்.

## 'கரூரில் திட்டமிட்ட சதி போல...' நீதிமன்றம் நாடும் தவெக சொல்வது என்ன?

சென்னை: செப்.29-

உயர் நீதிமன்ற விடுமுறைக் கால நீதிபதியிடம் முறையிட்ட தவெக தரப்பு, 'கரூரில் நடைபெற்ற விஜய் பிரச்சார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்த சம்பவம் என்பது விபத்து போல தெரியவில்லை; திட்டமிட்ட சதிபோலவே தெரிகிறது' என்று குறிப்பிட்டுள்ளது.




கரூரில் சனிக்கிழமை தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். ஒருபக்கம் பெருந்துயராக சோகத்தில் ஆழ்த்தியுள்ள இந்தச் சம்பவம், மறுபக்கம் அரசியல் ரீதியில் பல விவாதங்களை கிளப்பியிருக்கிறது.

இந்தப் பின்னணியில், உயர் நீதிமன்ற விடுமுறைக் கால நீதிபதியான தண்டபாணியை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் தவெக வழக்கறிஞர் அணியினர் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தனர்.

அப்போது, 'கரூரில் நடைபெற்ற விஜய் பிரச்சார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்த சம்பவம் என்பது விபத்து போல தெரியவில்லை. அது, திட்டமிட்ட சதிபோலவே தெரிகிறது. பிரச்சாரம் நடந்துகொண்டு இருந்தபோது, திடீரென எங்கிருந்தோ கற்கள் வீசப்பட்டன. போலீஸார் தடியடி நடத்தியுள்ளனர்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக சிபிஐ அல்லது சிறப்பு புலனாய்வு குழுவைக் கொண்டு உரிய முறையில் விசாரணை நடத்த வேண்டும். கண்காணிப்பு கேமரா காட்சிகளை பாதுகாக்க உத்தரவிட வேண்டும். இது தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்த வேண்டும்' என்று நீதிபதியிடம் தவெக வழக்கறிஞர் அறிவழகன், கட்சியின் இணை பொதுச் செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் ஆகியோர் முறையிட்டனர்.

அதற்கு நீதிபதி தண்டபாணி, 'இது குறித்து உயர் நீதிமன்ற மதுரை அமர்வில்தான் மனு தாக்கல் செய்ய வேண்டும்' என்று கூறியிருக்கிறார். அத்துடன், நீதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், தவெக சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் திங்கள்கிழமை மனு தாக்கப்படும் எனத் தெரிகிறது.

நீதிபதி உடனான சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய நிர்மல்குமார், "நீதிபதியிடம் முறையீடு செய்துள்ளோம். நாளை பிற்பகல் 2.15 மணிக்கு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக சொல்லியுள்ளார். இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் விரிவாக பேசவேண்டாம். நாளை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த பின்னர் இது குறித்து எங்கள் கருத்தை தெரிவிப்போம்" என்றார்.

அப்போது, தவெக தலைவர் விஜய் கரூருக்கு நேரில் செல்வாரா என்றும், தவெக நிர்வாகிகள் யாரும் ஏன் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவில்லை என்றும் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர். அதற்கு அவர் பதில் அளிப்பதை தவிர்த்துவிட்டுச் சென்றார்.

## "முழுமையான பாதுகாப்பு கொடுத்திருந்தால் உயிரிழப்புகளை தவிர்த்திருக்கலாம்" - கரூரில் இபிஎஸ் பேட்டி

கரூர், செப்.29-

கரூரில் தவெக தலைவர் விஜய் நடத்திய பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 39 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவர்களது குடும்பத்தினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேரில் ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: "இந்த பொதுக்கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே அங்கு மின்சாரம் நிறுத்தப்பட்டதாகவும், இதனால் அங்கு ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக நெரிசல் ஏற்பட்டதாகவும் எங்களுக்கு ஊடகங்கள் வாயிலாக தகவல் வந்துள்ளது. தவெக கூட்டம் நடைபெறுகின்ற போதே முன்னெச்சரி க்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதே கட்சி இதற்கு முன்னால் 4 பொதுக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அதையெல்லாம் ஆய்வு செய்து முழுமை யாக பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாக தொலைகாட்சியை பார்க்கும்போது தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த கட்சி மட்டுமல்ல, அதிமுக சார்பில் நான் நடத்தும் பயணத்தில் காவல்துறை எங்களுக்கு முழுமையான பாதுகாப்பு தரவில்லை.



இந்த அரசாங்கம் ஒருதலைபட்சமாக நடக்கிறது. ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று பார்க்காமல் நடுநிலையோடு நடக்க வேண்டும். அதிமுக ஆட்சியில் பல்லாயிரக்கணக்கான போராட்டங்களுக்கு, பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால் திமுக ஆட்சிக்கு வந்தபிறகு கூட்டம் நடத்துவதே சிரமம். நீதிமன்றம் சென்றுதான் அனுமதி பெற வேண்டிய சூழல் இருக்கிறது. முழுமையான பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த உயிரிழப்புகளை தவிர்த்திருக்கலாம். அதே போல ஒரு அரசியல் கட்சி தலைவரும் அதை கூர்ந்து கவனித்திருக்க வேண்டும். அவர் சுற்றுப் பயணம் செல்லும் மாவட்டங்களில் என்னென்ன குறைபாடு இருக்கிறது என்று அவரும் ஆலோசனை செய்து முன்னேற்பாடுகளை நடத்தியிருக்க வேண்டும்.

ஒரு பொதுக்கூட்டம் என்றால் ஒரு அரசியல் கட்சியை, அரசாங்கத்தை, காவல்துறையை நம்பித்தான் பொதுமக்கள் வருகிறார்கள். ஒரு நேரத்தை அறிவித்துவிட்டு பலமணி நேரம் கழித்து வரும்போது அதில் சில பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். இதில் நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. தமிழகம் மட்டுமின்றி இந்தியாவிலேயே இதுவரை ஒரு அரசியல் கட்சி நடத்திய பொதுக்கூட்டத்தில் இவ்வளவு உயிரிழப்புகள் ஏற்பட்டதில்லை. இது மிகுந்த வேதனையை தருகிறது. முதல்வர் ஸ்டாலின் கரூர் சென்றதை பொறுத்தவரை அரசாங்கத்தில் இருப்பவர்கள் செய்ய வேண்டியதைத்தான் முதல்வர் ஸ்டாலின் செய்திருக்கிறார். எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் இதைத்தான் செய்யும். இது அரசாங்கத்தின் கடமை. அதைத்தான் இந்த அரசும் செய்திருக்கிறது" இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

## சனிக்கிழமை கூட்டம் வைத்ததால்தான் இத்தனை பேர் உயிரிழந்தனர்: அண்ணாமலை குற்றச்சாட்டு

கரூர், செப்.29-

"விஜய் மாவட்டத்துக்கு ஒரு இடத்தில்தான் தான் பேசுகிறார். அப்படியானால் 20 ஆயிரம், 30 ஆயிரம் பேர் வரத்தான் செய்வார்கள். அதுவும் வாரக்கடைசியில்தான் கூட்டம் வைக்கிறீர்கள். சனிக் கிழமை என்பதால் குழந்தைகள், பள்ளி சிறார்கள், பெண்கள் வருகிறார்கள். சனிக்கிழமை கூட்டம் வைத்ததால்தான் இத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்" என தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

கரூரில் நேற்று தவெக தலைவர் விஜய் பிரச்சாரம் செய்தபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கரூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அண்ணா மலை, "இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கு அனைவரும் உறுது ணையாக இருக்க வேண்டும். கரூர் மாவட்ட பாஜக சார்பில் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு ரூ.1 லட்சம் வழங்கவுள்ளோம்.

நேற்று இச்சம்பவம் நடந்ததற்கு பல குளறுபடிகள் காரணம். இந்த கூட்டத்துக்கு சரியான இடத்தை வழங்காததால், முதல் குற்றச்சாட்டை மாநில அரசின்மீது வைக்கிறோம். சரியான இடமாக இருந்தால் அனுமதி வழங்கவேண்டும், இல்லையென்றால் வழங்கவே கூடாது. கரூரில் 500 போலீசார் பாதுகாப்பு வழங்கியதாக ஏடிஜிபி சொல்கிறார், அது தவறு. அவ்வளவு பேர் கூட்டத்தில் இல்லை. இவ்வளவு கூட்டம் கூடும் இடத்தில் போதிய அளவு போலீசார் இல்லை.

பொது இடத்தில் அனுமதி வழங்கும்போது பல விஷயங்களையும் பார்க்க வேண்டும். முக்கியமாக அசம்பாவிதம் ஏற்பட்டால் வெளியேறும் வழி இருக்க வேண்டும். இதனை கவனத்தில் கொள்ளாமல் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சியர், எஸ்பி இருவரையும் பணியிடை நீக்கம் செய்யவேண்டும். எங்கள் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முதல்வர் ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். அதனை நான் வரவேற்கிறேன்.

இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை வேண்டும். இந்த கூட்டத்தில் ஏதேனும் விஷமிகளின் செயல் உள்ளதா, மின்சாரம் தடை செய்யப்பட்டதா என விசாரிக்க வேண்டும். நீதிமன்றத்திலும் இதுகுறித்து விசாரிக்க வேண்டும்.

விஜய் மீதும் நான் குற்றச்சாட்டு வைக்கிறேன். சினிமா நடிகரை பார்க்க மக்கள் வரத்தான் செய்வார்கள். மற்ற அரசியல் கட்சிகள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு பாயிண்ட் வைத்து, அங்கே மக்களை சந்திக்கிறார்கள். ஆனால், விஜய் மாவட்டத்துக்கே ஒரு இடத்தில் தான் பேசுகிறார். அப்படியானால் 20 ஆயிரம், 30 ஆயிரம் பேர் வரத்தான் செய்வார்கள். அதுவும் வாரக் கடைசியில் வைக்கிறீர்கள். சனிக்கிழமை என்பதால் குழந்தைகள், பள்ளி சிறார்கள், பெண்கள் வருகிறார்கள். சனிக்கிழமை கூட்டம் வைத்ததால்தான் இத்தனை பேர் உயிரிழந்துள்ளனர். விஜய் இதனை யோசிக்க வேண்டும்.

நாம் செல்வதால் யாருக்கும் தொந்தரவு ஏற்படுமா என ஒரு கட்சியின் தலைவர் முதலில் யோசிக்க வேண்டும். தவெகவில் 2ம் கட்ட தலைவர்கள் இல்லா ததால், சரியாக திட்டமிட இயலவில்லை. எனவே விஜயின் பயணத்திட்டத்தை மாற்ற வேண்டும். விஜய்தான் முதல் குற்றவாளி என்பதையும் நான் ஏற்க மாட்டேன். அரசு மீதுதான் குற்றம் உள்ளது.

இன்னொன்றை நான் வயிறெரிந்து சொல்கிறேன். நாம் ஒரு வளர்ந்த மாநிலம், இந்தியாவில் படித்தவர்களில் 2ம் இடத்தில் உள்ளோம். நம் நடவடிக்கை அப்படியா உள்ளது. விஜய் காரில் போனால், அவரை துரத்தியபடி பைக்கில் 50 பேர் செல்கின்றனர்.

நம் வீட்டுக்கு நாம்தான் முக்கியம். மரத்தில் தொங்குவது, கட்டிடங்களின் மேல், டிரான்பர்மர் மேல் நிற்பது ஏன். பாதுகாப்பு இல்லாத இடத்தில் ஏன் இப்படி கூட்டம் சேருகிறீர்கள். உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் மட்டும்தான். பாதுகாப்பு இல்லாத கூட்டங்களுக்கு போகாதீர்கள்.

மற்றவர்களுக்கு 10 லட்சத்தில் நீங்கள் ஒருவர், ஆனால் உங்கள் குடும்பத்துக்கு நீங்கள் ஒருவர் மட்டும்தான். தயவு செய்து இதுபோல கூட்டம் உள்ள இடங்களுக்கு போகாதீர்கள். இல்லையெனில் தலைவரின் பேச்சை டிவி, யூடியூபில் பாருங்கள். பெரம்ப லூரில் அசம்பாவிதம் நடக்க இருந்தது, கடவுள் புண்ணி யத்தில் தப்பித்தோம்" என தெரிவித்தார்.




# வால்வோ இ.எக்ஸ்.30 எலக்ட்ரிக் எஸ்யூவி ரக கார் சிறப்பு விற்பனை துவக்கம்

கோவை, செப்.29-

கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் வால்வோ இ.எக்ஸ்30 என்கிற புதிய எலக்ட்ரிக் கார் அறிமுகம் விழா நடைபெற்றது.

இந்தியாவில் வால்வோ இ.எக்ஸ்30 என்கிற புதிய எலக்ட்ரிக் கார் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இந்நிலையில் இந்த கார்களை வாங்குவதற்கான முன்பதிவுகள் மற்றும் கார்களை ஓட்டி பார்க்க விரும்பும் கார் பிரியர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வால்வோ இ.எக்ஸ்.30 கார்கள் கோவை அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ஓட்டல் வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வால்வோ இ எக்ஸ் ரக கார்களை வாங்க விரும்புவோர் கார்களை ஓட்டி பார்ப்பதுடன், கார்களின் முழு விவரங்களையும் தரும் வகையில் வால்வோ இந்தியா நிறுவன அதிகாரிகள் முகாமிட்டுள்ளனர்.

இது குறித்து வால்வோ கார் தமிழ்நாடு விற்பனை தலைமை அதிகாரி விசாகன் கூறுகையில், வால்வோ இ.எக்ஸ் 30 சிறிய எலக்ட்ரிக் எஸ்யூவி கார், வகைகளில், அதிநவீன தொழில் நுட்பம் மற்றும் பிரீமியம் வசதிகளுடன் இருப்பதாகவும் தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் நவீன வசதிகள் என அனைத்தையும் சேர்த்த கலவையாக உருவாகி உள்ள வால்வோ இஎக்ஸ்30 கார் வளர்ந்து வரும் எலக்ட்ரிக் எஸ்யூவி பிரிவில் ஒரு தனித்துவமான காராக இருக்கும் மேலும் பாதுகாப்பு அம்சங்களில் அனைத்து வகை கார்களுக்கும் முன்னுதாரணமாக வால்வோ கார் இருப்பதாக கூறிய அவர், இந்த புதிய வால்வோ இ.எக்ஸ் 30 ஆனது லெவல்2 ஏடிஏஎஸ்யில் வருவதாக தெரிவித்தார்.

அதிக வேகத்தில் இயங்கும்போதும் பிரேக்குகள் நிலையானதாக அதிக பாதுகாப்புடன் செயல்படுவதாக தெரிவித்த அவர்,ஓட்டுநர் உதவி அம்சங்களில் லேன்கீப்பிங் உதவி, அடாப்டிவ் க்ரூஸ் கண்ட்ரோல் மற்றும் 360 டிகிரி கேமரா ஆகியவை இதில் இருப்பதாக கூறினார். இது ஓட்டுனர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் வசதியை வழங்குவதாகவும்,. பார்க்கிங் சென்சார்கள் மற்றும் ஆட்டோபார்க்கிங் போன்ற அம்சங்கள் எளிதாக காரை கையாளுவதற்கு வசதியாக இருக்கும் என அவர் கூறினார்.

இந்நிகழ்வில் வால்வோ கார் தமிழ்நாடு நிறுவன அதிகாரிகள் சரத்குமார், அழகப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

# எண்ணும் எழுத்தும் பயிற்சி அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்க அறிவுறுத்தல்

சென்னை, செப்.29-

1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பாக அக்.7ம் தேதி முதல் நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் ஆசிரியர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை: தமிழகத்தில் கடந்த 2022-23ம் கல்வியாண்டு முதல் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம்




அரசாணையின்படி 2025 முதல் 2027ம் ஆண்டு வரை தொடர்ந்து நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. இந்த நிலையில் நடப்புக்கல்வி யாண்டில் (2025-26) 1முதல் 4ம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எண்ணும் எழுத்தும் பாடப்பொருள் சார்ந்து 2ம் பருவத்துக்கான ஒன்றிய அளவிலான பயிற்சியினை அக்.7ம் தேதி முதல் அக்.10ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிக்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ஏற்றவாறு குழுக்களாகப் பிரிந்து கருத்தாளர்கள், குழுக்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு பயிற்சி நாள்களை முடிவு செய்து, மேற்குறிப்பிட்ட தேதிக்குள் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சி நடைபெறும் நாளில் தொடக்க வகுப்புகளில் கல்வி சார்ந்த பணிகள் பாதிக்கப்படக் கூடாது. பயிற்சி நடைபெறும் நாளில் ஆசிரியர் இல்லாத நிலையில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் மாற்றுப் பணியில் ஆசிரியரை நியமனம் செய்ய வேண்டும். ஒன்றிய அளவிலான இந்த பயிற்சியில் 1 முதல் 5ம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அவர்களை பணிவிடுப்பு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு சுற்றுப்பயணம் :

# மதுரை மாநகராட்சி பள்ளி மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பிவைத்த ஆணையாளர் சித்ரா விஜயன்

மதுரை, செப்.29-

மதுரை மாவட்டத்திலிருந்து இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்தை காண்பதற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் மதுரை மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளை ஆணையாளர் சித்ரா விஜயன், மதுரை விமான நிலையத்தில் இருந்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்பபள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் கடந்த மாதம் 10 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு ஹைதாரபாத்தில் உள்ள அறிவியல் மையத்தை பார்வையிட்டு உள்ளார்கள்.

அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சி மற்றும்




ரோட்டரி கிளப் மதுரை மிட்டவுண் இணைந்து ஆந்திர பிரதேசம் மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்தை காண்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவன் ஹரிசூர்யா பிரகாஷ், ஈ.வெ.ரா பெண்கள் மாநகராட்சி பள்ளி மாணவி தாயூபா, காக்கைபாடினியார் பெண்கள் மேல்நிலை ப்பள்ளி மாணவி காவியதர்சினி, திரு.வி.க.மேனிலை ப்பள்ளி மாணவன் கோகுல், நாவலர்சோமசுந்தர பாரதியார் மேல்நிலை ப்பள்ளி மாணவி சிவசக்தி, வெள்ளி வீதியார் மாநகராட்சி பெண்கள் மாணவி சாதானா, பாரதிதாசனார் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவன் தரணிதரன், பாண்டியன் நெடுஞ்செழியன் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவன் கார்த்திகேயன், மாசாத்தியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி உதயாஸ்ரீ, பொன்முடியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி தேவிஸ்ரீ, சுந்தரராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவன் ஜெய்ரூஸ்ராஜன் ஆகிய 5 மாணவர்கள், 6 மாணவிகள் உட்பட மாசாத்தியார் பெண்ள் மேல்நிலைப்பள்ளி உமாமகேஸ்வரி முதுகலை பட்டதாரி ஆசிரியரும் என மாநகராட்சி பள்ளிகளில் இருந்து 12 நபர்களும் மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள் மாணவ, மாணவிகள் 20 நபர்கள் உட்பட மொத்தம் 32 மாணவ, மாணவிகள் செல்கிறார்கள். இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்தை காண்பதற்கு செல்லும் மாணவ, மாணவிகளை ஆணையாளர் அவர்கள் மதுரை விமான நிலையத்தில் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், கல்விப்பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், ரோட்டரி கிளப் உறுப்பினர்கள், மாணவ, மாணவிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### பம்மலில் அன்னை தெரேசா அம்மா அவர்களின் நினைவுநாள் முன்னிட்டு

# மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

பம்மல், செப்.29-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மலில் 07/09/2025 அன்று பம்மல் இரட்டை பிள்ளையார் கோவில் தெருவில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக அன்னை தெரேசா அம்மா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவருடைய புகைப்படத்தில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தி மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இம்முகாமில் 100க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை கோரிக்கை மனுவாக எழுதிக் கொடுத்தனர். மேலும் சிறப்பு விருந்தினராக கவிஞர் செல்வராஜ், கோவிந்தராஜன், சத்தியமூர்த்தி சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். மேலும் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவ தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி மற்றும் அறக்கட்டளையின் கிளை செயலாளர்கள் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை கலந்து கொண்டு சிறப்பித்தனர்




# பம்மல் பகுதிகழக அதிமுக சார்பில் திமுக அரசின் நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து கண்டன பொதுகூட்டம்

பம்மல், செப்.29-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பம்மல் 1வது மண்டலம் மூங்கில் ஏரி முத்துமாரி அம்மன் கோயில் அருகே பம்மல் பகுதிகழக அதிமுக சார்பில் திமுக அரசின் சீர்க்கேடுகளான விலைவாசி உயர்வு, பெண்களுக்கு பாதுகாப்பின்மை, இளைஞர்களை சீரழிக்கும் போதை பொருள் கலாச்சாரம் என பல்வேறு வகையான சீர்கேடுகள் உள்ளதை விளக்கி கண்டன பொதுகூட்டம் பம்மல் பகுதி செயலாளரும், முன்னாள் நகரமன்ற துனை தலைவருமான அப்புவெங்கடேசன் தலைமையில் 10வு வட்ட கழக செயலாளர் சரவணன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நெத்தியடி நாகையன், மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லப்பாக்கம் இராசேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ப.தன்சிங், கலந்து கொண்டு அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த பல்வேறு நலதிட்ட உதவிகளை நிறுத்தியது திமுக அரசு எனவும் ஆட்சி வரும் முன்பு 500 வாக்குறுதிகள் கொடுத்த திமுக அரசு அதனை முழுமையாக நிறைவேற்றபடவில்லை எனவும் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, போதை கலாச்சாரம் என பல்வேறு வகையான சீர்கேடுகளை கண்டித்து சிறப்புரையாற்றி 2026ல் நல்லாட்சி மலர்திட அதிமுக ஆட்சி கொண்டு வந்து எடப்பாடியாரை முதலமைச்சராக்க இரட்டை இலைக்கு ஓட்டு போடவேண்டும் என பொதுமக்களை கேட்டுகொண்டனர். இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்கள் 500 க்கும் மேற்பட்டோருக்கு நலதிட்ட உதவி வழங்கினர். இதில் பரங்கிமலை ஒன்றியகழக செயலாளர் பொழிசை பாபு, முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் துரை தண்டபாணி, கிஷோர்குமார், முகுந்தன், விநாயகம், மற்றும் பம்மல் பகுதி கழக நிர்வாகிகள் சரவணராஜ், லோகநாதன், பன்னீர்செல்வம் உட்பட ஏராளமானோர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஜி.கே.என்.எம். மருத்துவமனை சார்பில் ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் என்ற விழிப்புணர்வு மாரத்தான்

கோவை, செப்.29-

கோயம்புத்தூர் கோ.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவ மனை சார்பில், இதயக் குறைபாடுகள் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில், “ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் என்ற விழிப்புணர்வு மாரத்தான் 3ம் பதிப்பு பாப்பநாயக்கன்பாளையம், மணி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

லட்சுமி மில்ஸ் மற்றும் லட்சுமி கார்ட் கிளாத்திங் ஆகிய நிறுவனங்கள் இணைத்து மாராத்தனை நடத்தியது. கோவை போக்குவரத்து காவல்துறை உதவி ஆணையாளர் கோகுலகிருஷ்ணன் ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் முதன்மை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி ஆகியோர் முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து கொடி அசைத்து மாரத்தான் ஓட்டத்தினை




துவக்கி வைத்தனர்.

இதில் மூன்று வெவ்வேறு பிரிவுகளில் மாரத்தான் நடைபெற்றது.

எல்லா வயதினருக்கும். 1,3 கி.மீ. இதில் குழந்தைகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் ஒன்றாக ஓடினர்.

12 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கும். 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் 5 கிமீ ஓட்டம் நடைபெற்றது. மேலும் 10 கி.மீ. இதில் 18 வயது முதல் 39 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். மேலும் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் ஒரு பிரிவாக இதில் கலந்து கொண்டனர். 5 மற்றும் 10 கிமீ பிரிவுகளில் வெற்றி வெற்றவர்களுக்கு ரொக்க பரிசு தொகை ரூ.75,000 வழங்கப்பட்டது. 2500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்டனர். ஜி.கே.என். எம்.மருத்துவம னையில் புற்றுநோய் மற்றும் இருதய குறைபாடுகளுக்காக காக சிகிச்சை பெற்று குணமடைந்த குழந்தைகளும் இந்த மரத்தானில் கலந்து கொண்டு ஓடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இது குறித்து ஜி.கே.என்.எம். மருத்துவ மனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். ரகுபதி வேலுசுவாமி கூறியதாவது: ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் 2024 இன் இரண்டாவது பதிப்பில், 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும், இதய குறைபாடுகள் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்ட 55 குழந்தைகள், இந்த மரத்தானில் கிடைத்த நிதி மூலம் பயனடைந்தனர். கடந்த இரண்டு பதிப்புகளில் போலவே இம்முறையும். ஜி.கே.என்.எம் மருத்துவ மனையில் புற்றுநோய் மற்றும் இருதய குறைபாடுகளுக்காக சிகிச்சை பெற்று குணமடைந்த குழந்தைகள். இந்த மரத்தானில் கலந்து கொண்டனர். கேஎன் சி அறக்கட்டளையின் ஒரு பிரிவான ஜி.கே.என்.எம். மருத்துவமனை, கோயம்புத்தூர் நகரத்தில் குழந்தைகளுக்கான இருதய பராமரிப்பு மற்றும் குழந்தைகளுக்கான புற்றுநோயியல் சிகிச்சையில் முன்னோடியாக உள்ளது. இந்த இரண்டு மருத்துவ பிரிவுகளுமே. நவீன தொழிநுட்பங்களுடனும் உலகத்தரமான மருத்துவக்கருவிகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது என தெரிவித்தார்.

# மதுராந்தகத்தில் அன்னை தெரேசா அம்மா அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

மதுராந்தகம், செப்.29-

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 21/09/2025 அன்று மதுராந்தகத்தில் உள்ள இந்து மேல்நிலைப் பள்ளியில் மதுராந்தகக் கிளை அறக்கட்டளையில் உள்ள பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக அன்னை தெரேசா அம்மா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவருடைய புகைப்படத்தில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தி மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இம்முகாமில் 150க்கு மேற்பட்ட மாற்றுத்தி றனாளிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை கோரிக்கை மனுவாக எழுதிக் கொடுத்தனர். மேலும் சிறப்பு விருந்தினராக இந்து மேல்நிலை ப்பள்ளி தலைமை ஆசிரியர் சௌமியா லக்ஷ்மி, ஜோசப் ஜெயசீலன்



பட்டதாரி ஆசிரியர் பழனி மதுராந்தகம் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். மேலும் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவ தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி மற்றும் அறக்கட்டளையின் கிளை செயலாளர்கள் பாஸ்கர், மாதவன், பாண்டியராஜன், செயற்குழு உறுப்பினர்கள் மோகன், சௌந்தர்ராஜன், ரமேஷ், ஜெயக்குமார், மோகனரங்கன், கந்தன், புஷ்பா, வளர்மதி மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



## கார்மேனி செல்வம் கதை என்ன? இயக்குநர் பதில்

சமுத்திரக்கனி, கவுதம் வாசுதேவ் மேனன் முதன்மை வேடங்களில் நடிக்கும் படம் 'கார்மேனி செல்வம்'. லட்சுமி பிரியா, அபிநயா உள்பட பலர் நடித்துள்ளனர்.

நகைச்சுவை, சென்டிமென்ட் கலந்த குடும்பப் படமாக உருவாகியுள்ள இதை, பாத்வே புரொடக்‌ஷன்ஸ் சார்பில் அருண் ரங்கராஜுலு தயாரித்துள்ளார். யுவராஜ் தக்‌ஷன் ஒளிப்பதிவு செய்துள்ளார். ராம் சக்ரி இயக்கியுள்ளார் இவர் ஏற்கெனவே 'குறையொன்றுமில்லை' படத்தை கார்த்திக் ரவி என்ற பெயரில் இயக்கியவர்.

படம் பற்றி அவர் கூறும்போது, "நேர்மையான, உண்மையான மற்றும் உலகளவில் தொடர்புப்படுத்தக் கூடிய கதையை கொண்ட படம் இது. பணத்தின் மீது ஏற்படுகிற ஆசை, ஒருவர் வாழ்க்கையில் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பது ஒன் லைன். இதில் சமுத்திரக்கனி, கவுதம் வாசுதேவ் மேனன் இருவருமே இயக்குநர்கள் என்பதால், நடிப்பைப் பெறுவது எளிதாக இருந்தது.

சில இடங்களில் அவர்களிடம் திருத்தம் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. அதற்குச் சரியான விளக்கத்தை அவர்கள் எதிர்பார்த்தார்கள். சொன்னதும் ஏற்றுக்கொண்டு நடித்தார்கள். இருவருக்குமான காட்சிகள் ரசிக்கும்படி இருக்கும். கதை சென்னையிலும் சில காட்சிகள் வெளிநாட்டிலும் நடக்கிறது. இந்தப் படத்தின் இசையை மியூசிக் கிளவுட் ஸ்டுடியோ அண்ட் டெக்னாலஜி எனும் நிறுவனம் அமைத்துள்ளது. வருவாய் பகிர்வு அடிப்படையில் இந்நிறுவனம் இசை அமைத்துள்ளது.

இசை அமைப்பில் இந்த முறை, தமிழ் சினிமாவுக்கு புதிது. இதன் முதல் பாடல் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளது. தீபாவளிக்குப் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்" என்றார்.



## ஷாலினிக்கு மீட்சி தருமா 'இட்லி கடை'?

என் வாழ்வின் முக்கியமான நிகழ்வு கலைமாமணி விருது என்று மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு சார்பில் 2021, 2022, 2023ம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டது. அதில் 2023ம் ஆண்டுக்கான நடிகருக்கான கலைமாமணி விருது பெறவுள்ளார் மணிகண்டன். இந்த விருது வென்றது குறித்து மணிகண்டன் தனது எக்ஸ் தளத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மணிகண்டன், "சிறப்புமிக்க கலைமாமணி விருது எனக்கு வழங்கிய தமிழ்நாடு அரசாங்கத்திற்கு மற்றும் இயல் இசை நாடக மன்றத்துக்கு என் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என் வாழ்வில் இது ஒரு முக்கியமான நிகழ்வாகும். என்னை தொடர்ந்து ஆதரித்து வந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் முக்கியமாக தமிழக மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள். இந்த கவுரவம் உங்களுக்கெல்லாம் சொந்தமானது" என்று தெரிவித்துள்ளார்.



## ரைட் — சினிமா விமர்சனம்:

ஆர்.டி. எஸ் ஃபிலிம் ஃபேக்டரி , திருமால் லட்சுமணன், டி.ஷியாமளா தயாரிப்பில், சுப்ரமணியன் ரமேஷ் குமார் இயக்கத்தில், நட்டி, அருண் பாண்டியன் , யுவினா இணைந்து நடிக்கும் படம் "ரைட்".

சென்னை கோவளத்தில் ஒரு காவல் நிலையம். அங்கே தனது மகனை காணவில்லை என புகார் கொடுக்க வருகிறார் சக்திவேல் பாண்டியன் ( அருண் பாண்டியன்) . இதற்கிடையில் மந்திரி அரசியல் கூட்டத்திற்கு பாதுகாப்பு கொடுக்க சென்று விடுகிறார் அந்த காவல் நிலைய அதிகாரி ரகுராம் ( நட்டி ) . இதற்கிடையில் காவல் நிலையத்தில் இருக்கும் ஒரு மர்மமான லேப்டாப் மூலம் மொத்த காவல் நிலையத்தையும் தனக்கு கீழே கொண்டு வருகிறான் ஒரு முகம் தெரியாத மர்ம நபர். யாராக இருப்பினும் காவல் நிலையத்திற்குள் வர முடியும் ஆனால் வெளியே போனால் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் பாம் வெடிக்கும். ஏன் எதற்கு அந்த காவல் நிலையம் மட்டும் பணயம் ஆக்கப்படுகிறது முடிவு என்ன என்பது மீதி கதை.

அருண் பாண்டியன் மற்றும் நட்டி கை தேர்ந்த நடிகர்கள் இருவரும் ஒன்றிணைந்து கதையை மிக அற்புதமாக கையாண்டு இருக்கிறார்கள். குழந்தை நட்சத்திரமாக இருந்த யுவினா இந்த படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார். அவருக்கும் நல்வரவு நல்ல கதாபாத்திரம்.

பொதுமக்களுக்கு பிரச்சனை என்றால் காவல் நிலையத்தை நாடுவார்கள் அந்த காவல் நிலையத்திலேயே ஒரு பிரச்சனை என வித்தியாசமாக யோசித்த இயக்குனருக்கு பாராட்டுக்கள். ஆனால் அப்படி ஒரு காவல் நிலையத்தையே கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்த பிறகு கூட காவல் நிலையத்தை சுற்றிலும் கூட காவல் போர்ஸ் வராமல் இருப்பது சற்று சினிமாத்தனம். இந்நேரம் அது நாட்டையே உலுக்கும் ஒரு மிகப்பெரிய செய்தியாக மாறி இருக்கும். அந்தப் பரபரப்பை கொடுக்கத் தடுமாறுகிறது திரைக்கதை. எனினும் சமூகத்தில் தினம்தோறும் செய்திகளில் நாம் படிக்கும் ஒரு பிரச்சனை தான் இதன் அடிநாதம்.. ஏதாவது ஒரு வகையில் இந்த சமூக பிரச்சனையை பேசித்தான் ஆக வேண்டும். என்கிற பட்சத்தில் இந்த கதை கவனம் பெறுகிறது.

பத்மேஷ் மார்த்தாண்டன் ஒளிப்பதிவு காவல் நிலையத்திற்கு உள்ளையே சுற்று சுற்றி எடுத்து கதையை சுவாரசியமாக்கி இருக்கிறது. குணா பாலசுப்பிரமணியன் இசையில் திரைக்கதையின் அழுத்தமும் நன்றாக நமக்குள் கடத்தப்படுகிறது. எடுத்துக்கொண்ட கதையிலிருந்து விலகாமல் கதை நகர்கிறது. இன்னும் ஆழமாக அழுத்தமாக உணர்வுபூர்வமாக இந்த கதையை கொடுத்திருந்தால் நிச்சயம் " மகாராஜா" போல் மகத்தான வெற்றியையும் கொண்டாட்டத்தையும் சந்தித்திருக்கும். எனினும் இப்போதும் கவனிக்கப்பட வேண்டிய சமூக படமாக மாறி இருக்கிறது.



## பாலிவுட்டில் கதாநாயகியாகும் மீனாட்சி சவுத்ரி?

பாலிவுட் நடிகர் ஜான் ஆபிரகாம் தனது போர்ஸ் படத்தின் 3வது பாகத்தை தொடங்க திட்டமிட்டுள்ளார். போர்ஸ் 3 படத்தை இயக்க பாவ் துலியாவை அவர் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், அதற்கான முன் தயாரிப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இதில் மீனாட்சி சவுத்ரி கதாநாயகியாக நடிக்க உள்ளதாக தெரிகிறது. பலரை ஆடிஷன் செய்த பிறகு, ஜான் ஆபிரகாமும் பாவ் துலியாவும் போர்ஸ் 3 படத்தின் கதாநாயகியாக மீனாட்சி சவுத்ரியை தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இது உண்மையாகும் பட்சத்தில் மீனாட்சி சவுத்ரி பாலிவுட்டில் கதாநாயகியாக அறிமுகமாகும் படமாக இது இருக்கும். ஏற்கனவே இவர் "அப்ஸ்டார்ட்ஸ்" என்ற இந்தி படத்தில் துணை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூப்பர் ஓவரில் இலங்கையை வீழ்த்தியது இந்தியா : ஆசிய கோப்பை



நடப்பு ஆசிய கோப்பை தொடரின் 'சூப்பர் 4' சுற்று ஆட்டத்தில் சூப்பர் ஓவரில் இலங்கையை வீழ்த்தியது இந்திய அணி.

ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆசிய கோப்பை தொடர் டி20 கிரிக்கெட் பார்மெட்டில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவும், பாகிஸ்தானும் இறுதிப் போட்டிக்கு முன்னேறி உள்ளன. இந்த சூழலில் ஏற்கெனவே திட்டமிட்டபடி இந்தியா மற்றும் இலங்கை அணிகள் இடையிலான சூப்பர் 4 சுற்று ஆட்டம் இன்று துபாயில் நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. இந்திய அணிக்காக அபிஷேக் சர்மா மற்றும் ஷுப்மன் கில் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். ஷுப்மன் கில் 4 ரன்களில் ஆட்டமிழந்தார். கேப்டன் சூர்யகுமார் யாதவ் 12 ரன்களில் வெளியேறினார்.

மறுமுனையில் அபிஷேக் சர்மா வழக்கம் போலவே பேட்டிங்கில் அதிரடி காட்டினார். அவர் 31 பந்துகளில் 61 ரன்கள் எடுத்தார்.

தொடர்ந்து திலக் வர்மா மற்றும் சஞ்சு சாம்சன் இணைந்து 66 ரன்கள் எடுத்தனர். சஞ்சு சாம்சன், 29 பந்துகளில் 42 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஹர்திக் பாண்டியா, 2 ரன்களில் விக்கெட்டை இழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ரன்கள் எடுத்தது. 203 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியின் ஓப்பனிங் பேட்ஸ்மேன் பதும் நிசங்கா 58 பந்துகளில் 108 ரன்கள் விளாசி அசத்தினார். அவருடன் ஓப்பனிங் இறங்கிய குசால் மெண்டிஸ் டக் அவுட் ஆகி வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வந்த குசால் பெரேரா நிசங்காவுடன் பார்ட்னர்ஷிப் அமைத்து அதிரடி காட்டினார். 58 ரன்கள் குவித்த அவர் 12வது ஓவரில் ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 202 ரன்கள் எடுத்து ஆட்டத்தை டிரா செய்தது. இதனையடுத்து சூப்பர் ஓவர் முறைப்படி இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு ஓவர் வழங்கப்பட்டது. இதில் முதலில் ஆடிய இலங்கை அணி, அர்ஷ்தீப் சிங் பந்துவீச்சில் தட்டுத் தடுமாறி இரண்டு விக்கெட்களுக்கு இரண்டு ரன்கள் மட்டுமே எடுத்தது. 3 ரன்கள் என்ற இலக்குடன் இறங்கிய இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாவத் முதல் பந்திலேயே 3 ரன்களை எடுத்தார். இதன் மூலம் இந்திய அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## கால் இறுதியில் ஜோஷ்னா ஜோடி



ரைஸ் அப் சாம்பியன்ஷிப் அறக்கட்டளை சார்பில் சர்வதேச பிக்கிள்பால் போட்டி சென்னை விஜிபி கோல்டன் பீச் ரிசார்ட்டில் நேற்று தொடங்கியது.

3 நாட்கள் நடைபெறும் இந்த போட்டியை இந்தியா பிக்கிள்பால் கூட்டமைப்பு, தமிழ்நாடு பிக்கிள்பால் சங்கம், டைனமிக் யுனிவர்செல் பிக்கிள்பால் ரேட்டிங், பிக்கிள்பால் உலக ரேங்கிங் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நடத்துகின்றன.

போட்டியின் தொடக்க நாளான நேற்று ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் பிரஜ்னேஷ் குணேஷ்வரன், வெங்கடேஷ் நாகராஜன் ஜோடி 12-8 என்ற கணக்கில் பிரணவ் டோய்போட், உத்சவ் சர்வய்யா ஜோடியை வீழ்த்தியது. மகளிர் இரட்டையர் பிரிவில் ஜோஷ்னா சின்னப்பா, நிரந்தரா முத்தையா ஜோடி 15-3 என்ற கணக்கில் சிருஷ்டி, ஜெயபிரியா ஜோடியை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது.



## துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு தங்கம்

ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி டெல்லியில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஜோனாதன் கவின் அந்தோணி 244.8 புள்ளிகளை குவித்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

இத்தாலியின் லூகா அரிகி (236.3) வெள்ளிப் பதக்கமும், ஸ்பெயினின் லூகாஸ் சான்செஸ் டோம் ( 215.1) வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர். மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ராஷ்மிகா சாஹல் 236.1 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

## கே.எல்.ராகுல். சாய் சுதர்சன் சதம் விளாசல்: இந்தியா 'ஏ' அணி அபார வெற்றி

இந்தியா 'ஏ' - ஆஸ்திரேலியா 'ஏ' அணிகள் இடையிலான கடைசி மற்றும் 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லக்னோவில் நடைபெற்றது. இதன் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 'ஏ' அணி 420 ரன்களும், இந்தியா 'ஏ' அணி 194 ரன்களும் எடுத்தன. 226 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்ஸை விளையாடிய ஆஸ்திரேலியா 'ஏ' அணி 46.5 ஓவர்களில் 185 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.



412 ரன்கள் இலக்குடன் பேட் செய்த இந்தியா 'ஏ' அணி 3வது நாள் ஆட்டத்தின் முடிவில் 41 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 169 ரன்கள் எடுத்தது. சாய் சுதர்சன் 44, மானவ் சுதார் ஒரு ரன்னுடன் களத்தில் இருந்தனர். நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய இந்தியா 'ஏ' அணி 91.3 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 413 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

கே.எல்.ராகுல் 210 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 16 பவுண்டரிகளுடன் 176 ரன்களும், நித்திஷ் குமார் ரெட்டி 16 ரன்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக மானவ் சுதர் 5 ரன்களில் வெளியேறினார். சாய் சுதர்சன் 172 பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 100 ரன்கள் விளாசி ஆட்டமிழந்தார். துருவ் ஜூரெல் 66 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 56 ரன்கள் விளாசினார்.

5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்தியா 'ஏ' அணி 2 போட்டிகள் கொண்ட அதிகாரப்பூர்வமற்ற டெஸ்ட் தொடரை 10 என கைப்பற்றியது. முதல் போட்டி டிராவில் முடிவடைந்திருந்தது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இரயில்வே சந்திப்பு நிலையத்தில் T.No. 56711 (மதுரை To இராமேஸ்வரம்) பயணிகள் வண்டி மானாமதுரை இரயில் நிலைய நடைமேடை எண் 1–ல் வந்து நின்ற சமயம் மானாமதுரை இருப்புப்பாதை காவல் நிலைய SI.Tr.தனுஷ்கோடி தலைமையில் காவலர்கள் சோதனை செய்தனர் அப்போது பின் பக்கம் இருந்து இரண்டாவது முன்பதிவு இல்லாத பொதுப் பெட்டியில் கழிவறை அருகே கேட்பாரற்று கிடந்த ஒரு வெள்ளை நிற சாக்கு பையில் சுமார் 14 கிலோ குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள் இருந்ததைக் கைப்பற்றி விசாரிக்க யாரும் உரிமை கோர முன் வராத காரணத்தால் அதனை கைப்பற்றி நிலையம் கொண்டு வரப்பட்டு சிவகங்கை மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் வசம் ஒப்படைக்கப்பட உள்ளது.





■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள ஐவர் கால் பந்து விளையாட்டு மைதானத்தில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் 80வது பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்களுக்கான கால்பந்து போட்டி இன்று நடைபெற்றது. மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி தலைமை வகித்தார். காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் சி.ஆர். சுந்தர்ராஜன் போட்டியை நேற்று துவக்கி வைத்தார். கரூரில் நேற்று நடந்த துயரச் சம்பவத்திற்கு 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்திய பின்னரே போட்டி துவங்கப்பட்டது



■ மதுரை மாவட்டம், வடக்கு வட்டம் பாலமந்திரம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுமிமி (தொகுதி II மற்றும் தொகுதி II A) பதவிகளுக்கு தேர்வு நடைபெறும் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்



# கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா மாட்டுவண்டி பந்தயம்

## பரணிகிட்டு, நெடுஞ்செழியன்,பா. செந்தில்குமார், பொறியாளர் செந்தில், கலா, சரவணன் பங்கேற்பு

கல்லல், செப்.29-

சிவகங்கை மாவட்டம் கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்ததினத்தை முன்னிட்டு, கோவிலூர் பகுதியில் மாபெரும் மாட்டுவண்டி எல்கைப் பந்தயம் நடைபெற்றது.

பந்தயத்தை கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் கல்லல் நா. நெடுஞ் செழியன், மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட மேனாள் கவுன்சிலர் நாகனி பா. செந்தில்குமார், மாவட்ட துணை அமைப்பாளர், அரசு ஒப்பந்ததாரர் கோவிலூர் பரணிகிட்டு என்ற வெள்ளைச்சாமி, மாவட்ட ஐடி விங் மாமன்ற உறுப்பினர், முனைவர் கலா காசிநாதன், கலைஞர் பேரவை பொறியாளர் செந்தில், காரை தமிழ்நம்பி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் விசாலயன்கோட்டை சரவணன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

பெரிய மாடு, சின்னமாடு என்ற இரு அணிகளாக பந்தயத்தில் இடம்பெற்ற மாடுகளானது சிவகங்கை, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கலந்து கொண்டன.

மாட்டுவண்டி பந்தயத்தில் மாவட்ட பிரதிநிதி சேவியர், மாநகர் இளைஞரணி அமைப்பாளர் தினகரன், காரை கார்த்திக், மாணவரணி ஜெபத்துரை, இளைஞரணி ரஞ்சித் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் மீனாட்சி மிஷன் மருத்துவமனை நடத்திய வெற்றி ஓட்ட மாரத்தான்’

மதுரை, செப்.29-

சர்வதேச குழந்தைப்பருவ புற்றுநோய் விழிப்புணர்வு மாத அனுசரிப்பின் ஒரு பகுதியாக, மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை ‘வெற்றி ஓட்ட மாரத்தான்’ என்ற நிகழ்வை இன்று சிறப்பாக நடத்தியது. குழந்தைப்பருவ புற்றுநோய் பாதிப்பிலிருந்து, சிகிச்சையினால் வெற்றிகரமாக விடுபட்டு உயிர்வாழும் சிறார்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உட்பட 500க்கும் மேற்பட்ட நபர்கள் இதில் பங்கேற்றது, புற்றுநோயை வெல்ல முடியும் மற்றும் அதன் கடுமையான பாதிப்பிலிருந்து மீண்டு துடிப்பான வாழ்க்கையை வாழ முடியும் என்ற மனஉறுதியையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்தது. எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொடங்கி, மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் நிறைவடைந்த மாரத்தான் ஓட்டத்தில், S.R. டிரஸ்டின் செயலாளர் மற்றும் அறங்காவலர் காமினி குருசங்கர், மருத்துவமனையின் நிர்வாக



அதிகாரி டாக்டர்.கண்ணன் மற்றும் குழந்தைகளுக்கான இரத்தப் புற்றுநோயியல் துறைத்தலைவர் மற்றும் முதுநிலை நிபுணரான டாக்டர் காசி விஸ்வநாதன் ஆகியோர் இந்நிகழ்வில் முன்னிலை வகித்தனர். மேலும் குழந்தைகளுக்கான புற்றுநோயியல் துறை நிபுணர்களான டாக்டர் அன்னபூரணி, டாக்டர் அனிதா மற்றும் டாக்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் இதில் பங்கேற்று சிறப்பித்தனர். மாரத்தான் ஓட்டத்திற்கு பிறகு நடைபெற்ற நிகழ்வில், புற்றுநோயிலிருந்து மீண்டு வாழும் இளம் சிறார்கள் சிறப்பான நடன கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாறுவேடப் போட்டி ஆகியவற்றின் வழியாக தங்களது உள்ளார்ந்த திறன்களை அழகாக வெளிப்படுத்தினர். இளவயது புற்றுநோயிலிருந்து மீண்டு இப்போது வயதுவந்த நபர்களுள் சிலர், தங்கள் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து உத்வேகம் அளிக்கும் செய்திகளை பகிர்ந்து கொண்டது, இளம் புற்றுநோயாளிகளுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் வழங்கியது. மருத்துவமனை பணியாளர்கள் வழங்கிய ஒரு உணர்வுப்பூர்வ ஓரங்க நாடகம், இந்த நிகழ்வில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

சிறப்புரை ஆற்றிய Ms. காமினி குருசங்கர், புற்றுநோய் சிகிச்சையின் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் ஒவ்வொரு குழந்தையும், நாம் அனைவரும் பாராட்டி கொண்டாடப்பட வேண்டிய ஒரு கதாநாயகன் / கதாநாயகி தான். இன்று நடைபெற்ற ‘வெற்றி ஓட்டம்’ என்ற இந்நிகழ்வானது, ஓட்டப்பந்தயத்தின் இறுதிக்கோட்டை கடப்பது மட்டுமல்ல; தைரியத்தை கௌரவிப்பதாகவும், மருத்துவ முன்னேற்றத்தை கொண்டாடுவதாகவும், நம்பிக்கை வெளிச்சத்தைப் பரப்புவதாகவும் இது இருக்கிறது. MMHRCல் 80% என்ற வெற்றி விகிதத்தை அடைந்திருப்பது எங்களுக்கு பெருமிதத்தையும், திருப்தியையும் தருகிறது.” என்று குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கான இரத்தப் புற்றுநோயியல், இரத்தவியல் மற்றும் எலும்புமஜ்ஜை மாற்று சிகிச்சை துறைத்தலைவர் மற்றும் முதுநிலை நிபுணரான டாக்டர் காசி விஸ்வநாதன் பேசுகையில், “தென் தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கான புற்றுநோய் சிகிச்சையில் முதன்மை மருத்துவமையமாக எமது மருத்துவமனை இயங்கி வருகிறது. 2010ம் ஆண்டிலிருந்து புற்றுநோய்கள் மற்றும் இரத்தக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட 2500க்கும் அதிகமான குழந்தைகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. இரத்தப் புற்றுநோய் இருந்த ஏறக்குறைய 1000 குழந்தைகளுக்கும் மற்றும் திடமான (நியூரோபிளாஸ்டோமா, மூளைக் கட்டிகள், சிறுநீரகக் கட்டிகள் மற்றும் சாற்றுப்புற்று உட்பட) புற்றுக்கட்டிகள் உருவாகியிருந்த சுமார் 700 குழந்தைகளுக்கும் இங்கு தரமான சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கான புற்றுநோயியல் சிகிச்சை குழுவினர் சிகிச்சை மீது மட்டும் கவனம் செலுத்துவதில்லை தங்களது இளம் நோயாளிகளுக்கு வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதையும் இலக்காக கொண்டு செயல்படுகின்றனர்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உதவியாளர் உதவியிடன் TNPSC தேர்வு எழுதிய பார்வையற்ற மாற்றுத் திறனாளி முதன்மை கண்காணிப்பாளர் அனுமதி அளித்ததின் பேரில் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளி கலீல் ரகுமான் ஒரு ஆசிரியை உதவியுடன் டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதினார். உதவியாளர் வினாத்தாளில் உள்ள வினா மற்றும் விடைகளை எடுத்துக் கூறி அதற்கு மாற்றுத்திறனாளி விடைகளை கூறி தேர்வு எழுதினார். தேர்வு மையத்தை பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் சரவணபெருமாள் ஆய்வு செய்தார்.



# வட கவுஞ்சி ஊராட்சி கருவேலம்பட்டி பழங்குடியினர் கிராமத்திற்கு புதிய சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை

திண்டுக்கல், செப்.29-

கருவேலம்பட்டி, செம்பிரான் குளம் பழங்குடியின மக்கள் மற்றும் சுய உதவி குழுவினரின் தொடர் முயற்சியாலும், கடந்த மே மாதம் பாச்சலூரில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.பி.செந்தில்குமார் அவர்களிடம் கீ ஙிவி சாலையை சிமெண்ட் சாலையாக முதலில் மாற்றி தரும்படியும், அதன் பின் தொடர்ந்து சாலை பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்று மாவட்ட ஆட்சியரின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களுக்கும், பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு ஐ. பி. செந்தில்குமார் அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், கொடைக்கானல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) கொடைக்கானல் திமுக கீழ் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் வி.எம்.ஏ.கருமலைபாண்டியன் அவர்களுக்கும் வட கவுஞ்சி ஊராட்சி செயலர் முருகேசன் அவர்களுக்கும் கருவேலம்பட்டி செம்பிரன்குளம் பளியர் பழங்குடியினர் மக்கள் சார்பாகவும், கடம்ப பூக்கள்,நாவப்பூக்கள், தீபம்,ஒளி விளக்கு, புதுமலர் பெண்கள் சுய உதவி குழுக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மதுரவாயல், சன்னதி முதல் குறுக்குத் தெருவில் ரூ.31.65 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட

# உயர்மட்ட மேம்பாலத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

சென்னை, செப்.28-

சென்னை மதுரவாயல் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு 143,144 மதுரவாயல், சன்னதி முதல் குறுக்குத் தெருவில் ரூ.31.65 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் உள்ளாட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்,டி. ஆர்.பாலு எம்பி, காரம்பாக்கம் க.கணபதி எம்எல்ஏ, சென்னை மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார், சென்னை நிலை குழு தலைவர் பணிகள் சிற்றரசு, சென்னை ஆணையர் குமாரகுருபரன், உள்ளாட்சி





முதன்மை செயலாளர் கார்த்திகேயன், 11 மண்டல குழு தலைவர் நெளம்பூர் ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம், ஒன்றிய செயலாளர் தலைவர் துரை வீரமணி,பகுதி துணைச் செயலாளர் வே.மதியழகன் மாமன்ற உறுப்பினர்கள் சங்கர் கணேஷ், ராமாபுரம் செல்வகுமார், ராஜி ஏ.ஸ்டாலின், பாரதி, செல்வி ரமேஷ், வினோத், ரமணி மாதவன், சாந்தி ராமலிங்கம், திலகர், மாலினி மற்றும் வட்ட கழக செயலாளர்கள் த.ரமேஷ், மாதவன், ஆலன், ரூபன், ராதா செல்வம், மோசஸ் மற்றும் அமைப்பாளர்கள் தினகரன் சண்முகம், ராஜேஷ், ரவி, மெட்ரோ நகர் சீனிவாசன், மூன் லைட் ரவி, தளபதி மகேஷ், பூத்தமேடு ரகு, போரூர் ராமலிங்கம், பாஸ்கர், பாபு, முருகன், பழனி, செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் 144வது மாமன்ற உறுப்பினர் ஏ.ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.



# பழைய பல்லாவரத்தில் கீழ்கட்டளை பகுதிகழக அதிமுக சார்பில் திமுக அரசின் நிர்வாக சீர்கேடுகளை விளக்கி தெருமுனை கூட்டம் நடைபெற்றது

கீழ்கட்டளை, செப்.29-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பழைய பல்லாவரத்தில் கீழ்கட்டளை பகுதி அதிமுக சார்பில் திமுக அரசின் நிர்வாக சீர்கேடுகளை விளக்கி தெருமுனை கூட்டம் 17வது வார்டு கிளை வட்ட கழக செயலாளர் இராமநாதன் தலைமையில் கீழ்கட்டளை பகுதிகழக செயலாளர் சந்திரசேகர ராஜா ஏற்பாட்டில் கச்சேரிமலை அருகே நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லப்பாக்கம் இராசேந்திரன், மேற்கு மாவட்ட துனை செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ப.தன்சிங், தலைமை கழக பேச்சாளர் இராஜகோபால், பல்லாவரம் பகுதிகழக செயலாளர் ஜெயபிரகாஷ் கலந்து கொண்டு திமுக ஆட்சியில் நடைபெறும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு பாதுகாப்பினமை, இளைஞர்களை சீரழிக்கும் போதைபொருள் கலாச்சாரம் என பல்வேறு குற்றச்சா ட்டுகளை முன் வைத்து சிறப்புரையாற்றினர். தெருமுனை கூட்டதை அதிமுக நிர்வாகிகள் சரத்லோகநாதன், சிவமூர்த்தி, விஜயன், ரஜினி ஆகியோர் சிறப்பாக அமைத்தனர். இதில் கீழ்கட்டளை பகுதி கழக நிர்வாகிகள், மகளிரணி உட்பட ஏராள மானோர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161